ஏக்கர் நீர்ப்பாசனம் உள்ள, நீர்ப்பாசனம் இல்லாத நிலம் இருக்க வேண்டும். குறுகிய காலக் கடன் வசதிகள் குறைந்த பட்சம் 2 லட்சம் இருக்கவேண்டும். இல்லையெனில் அந்த சங்கம் நான் வயபிள் சங்கமாகக் கருதப்பட்டு ரிசர்வ் வங்கி உத்திர விட்டு அந்த உத்திரவு நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டாயமாக ஆக்கப்பட்டு இருக்கிறது. காரணம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறுகிய காலக் கடன்களுக்கு நிதி வசதியை ரிசர்வ் வங்கி தரு கின்றது, ஆகவே அவர்கள் சில கட்டளையிடுகிறார்கள். அதை நடைமுறைப்படுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு ரெவின்யூ வில்லேஜூக்கும் ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கவேண்டு மென்ற முடிவை மறுபரிசீலனை செய்து அந்த சங்கங்களை வய பிள் என்ற அடிப்படையில் கொண்டுவரவேண்டுமென்று மாநில அரசும் ரிசர்வ்வங்கியிடம் வற்புறுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகிறபோது ரிசர்வ் வங்கியின் இந்த விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததா? இப்போது அவை அனுசரிக்கப்பட் டதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே மட்டுமல்லாமல், பாரதத்தின் பல்வேறு மாநிலங் களிலே இந்தச் சங்கங்கள் பரவலாக அமைக்கப்பட்டு நான்-வயபிள் என்ற நிலைக்கு வந்து, குறுகிய காலக் கடன்களைத் திருப்பித் தராத நிலைக்கு வந்து ரிசர்வ் வங்கி அதனை ஆராய ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்தது அந்த ஆய்வின் அடிப்படை யில் அவையெல்லாம். Amalgamation of Co-operativ Societies to a viable xt nt is inevitabl என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு எல்லாம் அறிவுரை கூறி கட்டளையும் இட்டது.

கிராமப்புற வீட்டு வசதி திட்டத்திற்காக ஒதுக்கப்படும் தொகை.

* வினா எண். 166—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு L.I.C. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரசு கடன் வாங்கி கொடுப்பதால் காலதாமதமாகின்றது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசே தனது நிதியிலிருந்து பணம் ஒதுக் கும் செயற்குறிப்பு உண்டா?